# மினுவன்கொடை நகர சபை

## கம்பஹா மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 02 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 மார்ச் 21 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2012 திசெம்பர் 13 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட சிறந்த தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் மினுவன்கொடை நகர சபை 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியுள்ளது என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்படும் எனது அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த காரணிகளால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மினுவன்கொடை நகர சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அச்செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகளையும் காசுப்பாய்ச்சல் கூற்றையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டிற்குரிய திரண்ட செலவினமான ரூபா 840,407 தொகை கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது தேசிய சேமிப்பு வங்கியிலும் மக்கள் வங்கியிலும் கடன் தவணைப் பணமான ரூபா 200,000 தொகை செலவினத் தலைப்பான 52533 இற்கு கணக்கிடப்படுவதற்குப் பதிலாக 34461 எனும் செலவினத் தலைப்பில் கணக்கிடப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 06 கணக்கு விடயங்களுக்குரிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16,811,489 ஆக இருந்ததுடன், இவற்றிற்குரித்தான பட்டோலைகள் மற்றும் அறிக்கைகளின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,742,244 ஆக இருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 28,909,466 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 6,018,257 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்திற்கு மேலான மீண்டெழும் செலவினம் ரூபா 4,825,192 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்குரித்தாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவை பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 7,501 | 8,535 | 6,027 |
| (ii) | குத்தகை | 8,699 | 7,925 | 1,717 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 534 | 825 | 103 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 11,551 | 5,972 | 4,661 |

### 2.2.2 நிலுவை வீதவரியை அறவிடுதல்

2010 செப்தெம்பர் 30 ஆம் திகதியின் பின்னர் நிலவிய வீதவரிக்காக இடர் ஆணைச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(அ) நிலுவை வீதவரியை அறவிடுவதற்காக இடர் ஆணைச்சீட்டு வழங்கப்படாது 2011 ஆம் ஆண்டிற்காக ஆதன இரத்துச் செய்யும் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 83,949 தொகையான தரகுப் பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் சீடீ/2/3/சி மற்றும் 1975 ஒக்டோபர் 13 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் ஆதன இரத்துச் செய்யும் உத்தியோகத்தர்களுக்கு தரகுப் பணம் பெற்றுக்கொள்வதற்காக களத்தில் ஆணைச்சீட்டில் குறிப்பிட்ட வீதவரியின் மொத்த நிலுவைத் தொகையும் அறவிடப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக நிலுவைத் தொகையில் ஓர் பகுதியை அறவிடுவதற்காகவும் தரகுப் பணம் செலுத்தப்பட்டிருந்தது.

### 2.3 பெற வேண்டிய கணக்குகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய முற்கொடுப்பனவு மீதி ரூபா 4,955,235 ஆகக் காணப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) பாதீட்டு முகாமைத்துவம்